பக்கங்கள் 19+4

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## இ.போ.ச. பஸ் மோதி மாணவன் மரணம்!

### சாவகச்சேரியில் சோகம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை – ஐயா கடை சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 18 வெள்ளிக்கிழமை 01.03.2024 அதிர்வு 214

# சாந்தனின் இறுதி நிகழ்வு ஞாயிறன்று வடமராட்சியில்

### சென்னையில் இருந்து வந்தடைந்தது பூதவுடல்





(ந.லோகதயாளன்)

சென்னையில் உயிரிழந்த ஈழத்தமிழன் சாந்தனின் (தில்லையம்பலம் சுதேந்திரராஜா) பூதவுடல் இன்று நண்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

அவரது பூதவுடல் கொழும்பில் இருந்து தரை வழியாக யாழ்ப்பாணம் கொண்டு வரப்படவுள்ளது. 04

### ஆசையோடு தேசம் காண இருந்தவருக்கு இந்திய அதிகாரம் எமனானது

# உயிரோடு வந்தவரை உயிரற்று அனுப்பிவைத்துள்ளது பாரதம்!

### சாந்தனின் இறப்பு காந்தி தேசத்தின் அவலக் குறியீடு; யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழர் தேசக் கனவோடு தாயகம் பிரிந்து, இந்திய ஒன்றியத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, முழுமை பெறாத நீதி விசாரணையால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு தமிழர்களில் ஒருவராக 33 ஆண்டுகள் சிறைவாழ்வை அனுபவித்து தாயகம் காணக் காத்திருந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா எனும் இயற்பெயருடைய சாந்தன் விரைவில் நாடு திரும்புவார் எனும் தமிழர்களின் எதிர்பார்ப்பும் தாயையும் தாய் மண்ணையும் காண வேண்டும் என்னும் 04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# புதிய திறன்களுடன் பெண்கள் வலுவூட்டப்பட்டு வளரவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



வருடாந்தம், நமது நாட்டில் இருந்து அதிக எண்ணிக்கையிலான பெண்கள் வீட்டு பணிப் பெண்களாக வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும்போது, இந்தியா தனது நாட்டுப் பெண்களுக்கு தகவல் தொழில்நுட்ப திறன்களை பயிற்றுவித்து அவர்களை மென் பொருள் பொறியாளர்களாக அனுப்பி வருகிறது.

வீட்டுப் பணிப்பெண்கள் என்ற எண்ணக்கருவுக்கு அப்பாற்பட்டு, எமது பெண்களை வலுவூட்டி சுகாதார சேவை வழங்குனர்களாகவும், தாதியர்களா கவும் வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் 109 ஆவது கட்டமாக 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், வட கொழும்பு, மஹவத்தை, புனித அந்தோனியார் தமிழ் வித்தியால யத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இந்த எண்ணக்கருவின் அடிப்படை யில் 9 மாகாணங்களிலும் சர்வதேச தரத்திலான தாதியர் பயிற்சி கலாசாலை கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன்பின் 25 மாவட்டங்களிலும் தாதியர் பயிற்சி கல்லூரிகளை ஆரம்பிப்போம். நாடு என்ற வகையில் நாம் எப்போதும் ஒரே இடத்தில் இருக்க முடியாது.

கடந்த காலங்களில் யுத்தத்தை முதன்மைப்படுத்தி சிலர் நாட்டை சொந்தமாக எழுதி எடுத்துக் கொண்ட வர்கள் போல தங்கள் இஷ்டத்துக்குத் தீர்மானங்களை எடுத்து நாட்டை அழித் தனர். அவர்கள் தங்கள் குடும்ப உறுப் பினர்கள் அனைவரையும் நாட்டின் உயரிய பதவிகளில் அமர்த்தி நாட்டை நாசம் செய்தனர்.

நாட்டை ஆட்சி செய்பவர்கள் தற்கா லிகப் பொறுப்பாளர்களே. எனவே 220 லட்சம் மக்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அரசில் அதிகபட்ச சேவைகளை வழங்கப்படும். இதற்காக ஆட்சியா ளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் பாவிக்கும் கணினிகள் மற்றும் ஸ்மார்ட் போன்கள் தொடர்பாக நடத்திய சமீபத்திய கணக் கெடுப்பின்படி, நமது நாட்டில் 33 வீத மான பிள்ளைகளிடம் மட்டுமே இந்த சாதனங்கள் உள்ளன. 67 வீதமான பிள்ளைகளிடம் இதுபோன்ற சாதனங் கள் இல்லை என்பதும் தெரிய வந் துள்ளது. ரணசிங்க பிரேமதாச வழங் கிய மதிய உணவு கூட நிறுத்தப் பட்டுள்ளது.

நமது நாடு 90 பில்லியன் அமெ ரிக்க டொலர்கள் கடன்பட்டுள்ளது. வியட்நாமுக்கு 2023 இல் அன்னிய நேரடி முதலீடு 35 பில்லியன் டொலர் கள் கிட்டியுள்ளது. 1.8 பில்லியன் டொலர்களே நமது நாட்டுக்குக் கிடைத் துள்ளது. ஆட்சி அதிகாரத்தைப் பெறுவது இலேசான காரியமல்ல. வாழ்க்கையில் மிகக் கடினமான விடயம். இந்த சவாலை ஏற்று வெற்றிபெற ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது.- என்றார்.



# திருமலை கோணேசரின் ஊர்வலத்துக்கு கேடகம்!

(ஹஸ்பர்)

சிவராத்திரியை முன்னிட்டு திரு கோணேஸ்வரரின் ஊர்வலம் இடம் பெறவுள்ள நிலையில், 15 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கேடகம் பயன்படுத்தப்படவுள்ளது என்று என திருகோணமலை மாவட்ட நலன் புரி சங்க தலைவர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

கனடாவில் உள்ள திருகோணமலை நலன்புரி சங்கம் இதற்கான நிதி உதவி களை வழங்கியுள்ளது என்று தெரி வித்தார்.

திருக்கோணேஸ்வர ஆலயத்துக் குச் சென்ற அவர் அதற்கான நிதியை உரியவரிடம் கையளித்த பின்பே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி சிவராத் திரியை முன்னிட்டு சுவாமி உலா இடம்பெறும்.

ஊர்வலத்துக்காகப் பயன்படுத் தப்பட்ட கேடகம் உடைந்து பழுதடைந் துள்ள நிலையில் புதிய கேடகம் அமைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 13 வயதில் பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்த திருமலை மாணவன்

திருகோணமலை இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் 13 வயதான மாணவன் ஹரிகரன் தன்வந்த் தனுஸ்கோடியில் இருந்து தலைமன்னார் வரையான பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

இன்று அதிகாலை 5.30 மணியளவில் தனுஸ்கோடியில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்த தன்வந்த் மதியம் 2 மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

தனுஸ்கோடி முதல் தலைமன்னார் வரையான 32 கிலோமீற்றர் தூரத்தை மிகக் குறைவான நேரத்தில் நீந்திக் கடந்து இலங்கையில் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

9 மணித்தியாலங்கள் 37 நிமிடங்கள் 54 செக்கன்களில் நீந்திக் கடந்து இலங்கையில் புதிய சாதனையை அவர் நிலைநாட்டியுள்ளார்.

# சாதனை படைத்த மாணவனுக்கு கிழக்கு ஆளுநர் செந்தில் வாழ்த்து




பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து, திருகோணமலையைச் சேர்ந்த 13 வயது சிறுவனான தன்வந்த் சாதனை படைத்துள்ள நிலையில், அவருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தனுஸ்கோடியிலிருந்து ஆரம்பித்த சாதனைப் பயணம் தலைமன்னாரை வந்தடைந்தது.

இந்தச் சிறுவன் மேலும் பல சாதனைகளை படைக்க வாழ்த்துக்கள் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## உயிரோடு வந்தவரை...

இறுதி ஆசையும் நிறைவேறாமலேயே அவர் உயிர் பிரிந்த செய்தி தமிழர் இதயங்களைக் கனக்க வைத்துள்ளது.”

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“பெற்ற மகனை ஒரு முறையாவது உயிருடன் பார்த்து விட வேண்டுமென்ற தாய்க்கும் – மகனுக்கும் இடையிலான 33 ஆண்டுகள் பாசப் போராட்டத்தில் சாந்தனின் இழப்பு அனைவரையும் வெடித்தழ வைக்கின்றது. மரணம் நிகழ்ந்த 28 ஆம் திகதி காலையில்கூட மகன் வருவான் என்று கோயில் தீர்த்தத்துடன் காத்திருந்த தாய்க்கு வாழ்நாள் ஏக்கம் கனவாய்ப் போனது பெருந்துயர்!

ஏதும் அறியா இளைஞனாக தமிழகம் வந்தவரை மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாகச் சிறைப்படுத்தி, சித்திரவதை செய்து நீண்ட நெடிய சட்டப் போராட்டங்களின் பின்னர் 11.11.2022 ஆம் திகதி இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றம் விடுதலை செய்த பின்னரும் இயற்கை நீதிக்கு முரணாக தொடர்ந்து 15 மாத காலம் திருச்சி சிறப்பு முகாமில் தடுப்பில் வைத்திருந்து உடல், உள ரீதியாய் பலவீனப்படுத்தி சிறுகச் சிறுகச் கொன்று தாயையும் தாய் மண்ணையும் காண ஆவல் கொண்டிருந்தவரை இன்று உயிரற்ற சடலமாய் அனுப்பி வைத்திருக்கிறது இந்தியம்.

பாரத தேசத்தின் பிராந்திய நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டு தொடர்ந்தும் அவமதித்து வரும் இலங்கை அரசுடன் நட்புப் பாராட்டும் காந்தி தேசம், தங்களின் அற்ப பூகோள நலன்களுக்காகத் தங்களை நோக்கி என்றுமே நேசக்கரம் நீட்டும் ஈழத்தமிழ் மக்களைத் வஞ்சிப்பதென்பது அந்த நாடு இதுவரை காலமும் தான் கொண்ட வரலாற்றுக்கும் பெருமைகளுக்கும் இழுக்கானதாகும். அன்று முதல் இன்று வரை காந்தியின் பெயர்கொண்டு, புரியும் கொடூரங்களால் தனக்கு மேல் போர்த்திய போர்வைகளைந்து நிர்வாணமாய் நிற்கின்றது காந்தி தேசம்.

29.02.2024 அன்று நடந்த நீதிமன்ற வாதங்களில் தமிழக அரசு வழக்கறிஞரின் கூற்றுப்படி தமிழக அரசே சாந்தனை விடுவிப்பதில் காலந்தாழ்த்தியது எனும் துயரச் செய்தி, எமக்காய் தமிழக உறவுகளும் தமிழக அரசும் நிற்பார்கள் என்று நம்பும் ஈழத்தமிழ் மக்களுக்குத் துரோகச் செய்தியாய்ப் போனது இன்னுமொரு பெருந் துயரம்!

சாந்தனைத் தாயகம் அழைத்து வருவதற்கு இறுதி ஒரு மாத காலத்துக்குள் காணப்பட்ட ஏதுநிலையைக் குறிப்பிட்ட சில காலங்களுக்கு முன்னதாகவேனும் உருவாக்கிட நடவடிக்கை ஏதும் எடுத்திருந்தால்கூட பெற்ற தாயைக் காண வேண்டும் எனும் இறுதி ஆசையையேனும் நிறைவேற்றிக் கொடுத்திருந்திருக்கலாம். ஆனால், ஏழு தமிழர்கள் இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ஒன்றாண்டு காலப் பகுதிக்குள் ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் கூட்டாக ஒரு தீர்க்கரமான தீர்மானங்கள் எதனையும் மேற்கொள்ளாது, அசமந்தமாகவும் அலட்சியப் போக்குடனும் செயற்பட்டமை என்பது மன்னிக்க இயலாத கண்டனத்துக்குரியதொன்று.

நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் இயற்கை நீதிக்கு விரோதமாகச் சிறப்பு சித்திரவதை முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ளவர்களையும் விடுதலை செய்து ஈழத்தமிழர்களை சிதைத்தெடுக்கும் சித்திரவதை முகாமுக்கு இனியாவது முடிவுரை எழுத இந்திய ஒன்றிய, மாநில அரசுகளை வேண்டுகின்றோம்.

ராஜீவ் காந்தி கொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட ஏனைய மூன்று ஈழத்தமிழர்களையும் அவர்கள் விரும்பும் இடங்களில் வசிப்பதற்கு அனுமதிக்க வேண்டுவதோடு, தாயகம் திரும்ப எவரேனும் விரும்பினால் அவர்களை அழைத்து வர இனியாவது உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஈழத்தமிழ் அரசியல் தரப்புக்களையும் சிறிலங்கா, இந்திய அரசுகளையும் வலியுறுத்துகின்றோம்.

நீதியைக் காத்து நிலைநாட்டுவதில் பக்கம் சாராமல் இந்திய உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கப்பட்ட காலம் முதல் அவர்களின் விடுதலைக்கான காலம் வரையில் காலத்திற்குக் காலம் எத்தனையோ வாய்ப்புக்களை வழங்கியும் இந்திய ஒன்றிய அரசும் தமிழக அரசும் தொடர்ச்சியான சட்ட செயற்பாடுகளின் மூலம் தாமதப்படுத்தியமை என்பது ஈழத்தமிழ் மக்களின் மீதான கசப்புணர்வையே வெளிப்படுத்தியிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. இனிமேலாவது ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளிற்கு விரோதமான செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஈழத்தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க உளச்சுத்தியுடன் இந்திய அதிகாரம் செயற்பட வேண்டுகின்றோம்.

உயிரோடு வந்தவரை இன்று உயிரற்று அனுப்பி வைத்துள்ளது பாரதம்! சாந்தனின் இறப்பு – காந்தி தேசத்தின் அவலக் குறியீடு!!” – என்றுள்ளது.

## சாந்தனின்...

இந்நிலையில், சாந்தனின் பூதவுடல் வழமையான பயணிகள் விமானத்தில் இலங்கைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது என்றும், அவரது பூதவுடல் தனியார் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் எதிர்வரும் ஞாயிறுக் கிழமை தமது இல்லத்தில் (வடமராட்சி – உடுப்பிட்டி) நடைபெறவுள்ளது என்றும் சாந்தனின் சகோதரர் மதிசுதா தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைதாகி 33 வருடங்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சாந்தன், பல போராட்டங்களின் பின்னர் தாயகம் திரும்பவிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் காலை சென்னை ராஜீவ் காந்தி அரச மருத்துவமனையில் மாரடைப்பால் உயிரிழந்தார்.

தனது தாயின் கையால் உணவு உண்ண வேண்டும் என்ற ஆசையில் காத்திருந்த மகன், பூதவுடலாக வந்துள்ளமை ஈழத்து மக்களைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

## இ.போ.ச. பஸ் மோதி...

பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் மாணவனே உயிரிழந்துள்ளார்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த 18 வயதான சிவநாவலன் பரணிதரன் என்ற மாணவனே சம்பவத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.



யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ், பாடசாலையில் விளையாட்டுப் பயிற்சியை முடித்து விட்டு சைக்கிளில் வீடு திரும்பிய மாணவனை மோதியதில் மாணவன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதன்பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதே உயிரிழந்தார்.

விபத்தின்போது மாணவன் பயணித்த சைக்கிள் பல துண்டுகளாகச் சிதறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விபத்துக்குக் காரணமான பஸ் சாரதியைக் கைது செய்த சாவகச்சேரிப் பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# கைதடி வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு பஸ் சேவையை மீளவும் ஏற்படுத்துக!

## போக்குவரத்துச் சபையிடம் கோரிக்கை

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கைதடி வடக்கு மற்றும் கைதடி கிழக்கு பகுதிகளுக்கான பஸ் சேவையை மீளவும் ஏற்படுத்தித் தருமாறு கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் கழகத்தினர் இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பாக போக்குவரத்துச் சபைக்கு அவர்கள் அனுப்பியுள்ள கோரிக்கைக் கடிதத்தில்,

ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட கைதடி வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதி வாய்ப்பை மீளவும் ஏற்படுத்தித் தரவேண்டியது காலத்தின் கட்டாயமாக அமைந்துள்ளது.

கைதடி வடக்கு மற்றும் கிழக்கு கிராமங்கள் கைதடிச் சந்தியில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளன.

சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் மேற்படி கிராமங்களுக்கு இன்மையால் பாடசாலை, சந்தை, சமுர்த்தி வங்கி, வைத்தியசாலை உள்ளிட்ட அத்தியவசிய இடங்களுக்கு செல்வதற்குக் கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கைதடி வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்கள் ஊடாக கடந்த காலத்தில் இலங்கை போக்குவர்த்துச் சபையின் போக்குவரத்துச் சேவை முன்னெடுக்கப்பட்டது. இருந்த போதிலும் அது உள்நாட்டு யுத்த நிலைமை காரணமாக 2006 ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டு இன்றுவரை அந்த சேவை மீள வழங்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

கைதடி வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசத்தில் 883 குடும்பங்களைச் சேர்ந்த 2591 பேர் வசித்து வருகின்றனர்.

இதில் 352 பேர் பாடசாலை மாணவர்கள்,159 பேர் பெண் தலைமைக் குடும்பங்கள், 31 பேர் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பபஸ்ஸில் செல்ல வேண்டிய தேவைப்பாடு அதிகள் உடையவர்கள் 209 பேர் வசித்து வருகின்றனர்.

இவர்கள் 4 கிலோ மீற்றர் தூரம் நடந்து வந்தே கைதடிச் சந்தியை அடைவதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு கைதடிக் கிராமங்களுக்கான பஸ் சேவையை மீளவும் முன்னெடுக்க வேண்டும்.– என்றுள்ளது.

அத்துடன் கடிதப் பிரதிகளை வடக்கு மாகாண ஆளுநர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள செயலாளர் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

கைதடி வடக்கு மற்றும் கிழக்கு கிராமங்கள் ஊடாக போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்கக் கோரி அண்மையில் பெண் தலைவர்களைக் கொண்ட கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் கழகம் அமைப்பால் தெருவெளி நாடக ஆற்றுகை விழிப்புணர்வு நிகழ்வொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நானாட்டானில் தொழில் வழிகாட்டல் நிகழ்வு





(மன்னார் நிருபர்)

நானாட்டான் பிரதேச் செயலகம் மற்றும் அட்ரா நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில் சந்தை நேற்று முன்தினம் புதன்கிழமை (28) காலை நானாட்டான் பிரதேச் செயலகத்தில் இடம்பெற்றன.

நானாட்டான் பிரதேச் செயலாளர் சிவசம்பு கனகாம்பிகை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

இதன் போது தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருந்த நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய இளைஞர் படையணி உள்ளடங்கலாக தொழில் சார் கற்கை நெறிகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது தொழில் பயிற்சிகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உள்சூக்குமம் யாதோ?

பலஸ்தீனத்தின் காஸாவில் இஸ்ரேலின் ஸியோனிஸப் படைகள் நடத்தும் கண்மூடித்தனமான - கொடூரமான - மிக மோசமான - மிருகத்தனமான - தாக்குதல்களை ஆட்சேபித்து, அவற்றுக்குப் பதிலடியாக இஸ்ரேலிய மற்றும் அதனுடன் கைகோர்த்து நிற்கும் மேற்கு நாடுகளின் கடல் போக்குவரத்தை இலக்கு வைத்து, செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பெரும் தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடங்கி உள்ளனர்.

இது, இஸ்ரேலையும் உள்ளடக்கிய அமெரிக்க ஆதரவுத் தரப்பு நாடுகளின் கடல் விநியோக மார்க்கத்தில் பெரும் பாதிப்பையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியிருப்பது கண் கூடு.

யேமன் நாட்டைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கை செங்கடல், ஏடன் வளைகுடா மற்றும் அரேபியக் கடல் ஆகியவற்றில் வணிகக் கப்பல்களின் போக்குவரத்திலும் நடமாட்டத்திலும் பெரும் பாதிப்பையும் பின்னடைவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் அந்தப் பகுதியில் கடல் போக்குவரத்துச் சுதந்திரத்தையும், வர்த்தகக் கப்பல்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக அமெரிக்கா தலைமையில் சுமார் ஒரு டசின் நாடுகளின் கடற்படைகள் கூட்டு செயல்பாட்டில் இறங்கி இருக்கின்றன. கடந்த டிசம்பர் மாதம் முதல் இது தொடர்கின்றது.

அமெரிக்கா தலைமையிலான இந்தப் பன்னாட்டுக் கடற்படைக் கூட்டு நடவடிக்கைகளில் இலங்கைக் கடற்படையும் பங்குபற்றும் என்று இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொள்கை ரீதியாக ரீதியான முடிவை அறிவித்துள்ள போதிலும், அது நடைமுறையில் சாத்தியம் இல்லை என்றும், அது இடம்பெறவும் இல்லை என்றும் இலங்கையின் பாதுகாப்புத் தரப்புகள் தெரிவித்து வந்தன.

ஆனால் இப்போது செங்கடல் பகுதியில் வணிகக் கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்படும் 'செழிப்பு பாதுகாப்பு' நடவடிக்கையில் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்று அனுப்பப்படுவதாக கொழும்புக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் அம்மையார் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த காலங்களில் இலங்கைக்கு அமெரிக்கா வழங்கிய ஆழ்கடல் ரோந்துக்கான மூன்று கப்பல்களில் ஒன்று மேற்படி பன்னாடுகளின் கூட்டுக் கடற்படை நடவடிக்கைக்காகச் செல்கின்றது என்று குறிப்பிட்டு அதற்காக அமெரிக்கத் தூதர் கொழும்பில் நன்றியும் தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை 'பாத்பைண்டர் நிறுவகம்' ஏற்பாடு செய்திருந்த இந்து சமுத்திரப் பாதுகாப்புத் தொடர்பான மூன்றாவது மாநாட்டில் உரையாற்றும்போதே இந்தத் தகவலை அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் வெளியிட்டிருக்கின்றார். இந்த மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் மேற்படி நிறுவகத்தின் ஸ்தாபகரும், புதுடெல்லிக்கான கொழும்பின் முன்னாள் தூதுவருமான மிலிந்த மொரகட ஆகியோரும் கூடப் பிரசன்னமாகி இருந்தனர். அப்போதே இந்தக் கருத்து அமெரிக்க தூதுவரால் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்படையின் ஆழ்கடல் ரோந்துப் படகு எதுவுமே செங்கடல் நோக்கிய திசையில் இப்போது இல்லை என்று இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றன.

செங்கடலில் தாக்குதல் நடத்தும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அங்கு ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களையும் கூட தமது நடவடிக்கைகளில் தாராளமாகப் பயன்படுத்துகிறார்கள்.

அத்தகைய ஆபத்தான தாக்குதல் முறைகளை முறியடிக்கும் பதில் பாதுகாப்பு கருவிகளையோ, பொறிமுறைகளையோ அல்லது எதிர்கொண்டு தற்காக்கும் ஏற்பாடுகளையோ இலங்கைக் கடற்படையின் எந்தக் கடலோரப் பாதுகாப்பு மற்றும் ஆழ்கடல் ரோந்துக் கப்பலும் கொண்டிராத நிலையில், செங்கடலில் இலங்கைக் கடற்படையின் நேரடி பிரசன்னம் என்பது அங்கு நொண்டி வாத்து நிலை கொண்டிருப்பதற்கு ஒப்பானது என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அண்மையில் கொழும்புக்கு வந்திருந்த அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் வர்மா கூட உலகெங்கும் உள்ள பொருளாதாரங்களுக்குப் பாதுகாப்பு நன்மை பயக்கும் விதத்தில் மேற்படி கடல் மார்க்கமான விநியோக சங்கிலியைப் பேணிக் காப்பதில் இலங்கையும் பங்கு பற்றுவதற்கு நன்றி தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி அமெரிக்கா தலைமையிலான 'செழிப்பு பாதுகாப்பு' நடவடிக்கையில் பங்கு பற்றுவோம் என்று கொள்கை ரீதியில் அறிவித்தமையை தவிர, அதில் எள்ளளவும் இலங்கை பங்களிக்கவும் இல்லை, செயல்படவும் இல்லை.

அப்படி இருக்கையில், அவ்வாறு வெறுமனே ஓர் அறிவிப்பை விடுத்தமைக்காக மட்டுமே அமெரிக்க தரப்பிலிருந்து இத்துணை பாராட்டும் நன்றியும் குவிவது வித்தியாசமானதுதான். இதற்குள் புதைந்து கிடக்கும் சூக்குமம் யாதோ...?



# இரணை இலுப்பைக் குளத்தில் நெல் அறுவடை நிகழ்வுகள்





(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் இரணை இலுப்பைக் குளத்தில் 2023 - 2024 ஆம் ஆண்டு காலபோக நெற் செய்கையின் நெல் அறுவடை விழா நேற்று முன்தினம் புதன்கிழமை (28) காலை நடைபெற்றது.

அந்தப் பகுதி விவசாய அமைப்பின் தலைவர் ஜீவா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.கனகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து இங்கு சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்ட மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி சாகீரா பானு , கமநல சேவை உதவி ஆணையாளர், மடு பிரதேச செயலாளர் வைத்திய அதிகாரி உட்பட கலந்து கொண்ட பலர் இந்த அறுவடையில் ஈடுபட்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாக இந்தப் பகுதி விவசாயிகள் தாங்கள் மேற்கொண்ட வேளாண்மையில் பெரும் பாதிப்பைச் சந்தித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலவச கற்றல் உபகரணம் மாணவர்களுக்கு வழங்கல்





(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை ஏ.எஸ்.டி.எச்.ஏ. அமைப்பால் வருடாந்தம் அமுல்படுத்தப்படும் "வளமான எதிர்காலம்" திட்டத்தின் கீழ் இவ்வருடம் சம்மாந்துறை அல்– அக்ஷா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.பி ஹிபதுல்லாஹ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் கலந்து கொண்டு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

மேலும் இந்த நிகழ்வுக்கு விஷேட அதிதியாக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் நிர்வாக பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.எம். சமீம் கலந்து கொண்டார்.

அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# கிறேட்வெஸ்டன் கல்கந்தவத்தை மக்கள் குடிதண்ணீர் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

(தலவாக்கலை)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிறேட்வெஸ்டன் கல்கந்த வத்தை தோட்ட மக்கள் தமக்குக் குடி தண்ணீர் கிடைப்பதில்லை என்று தெரிவித்து நேற்று முன்தினம் (28) ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

2002 ஆம் ஆண்டு தேசிய வீட மைப்பு தோட்ட உட்கட்டமைப்பு அமைச் சர் ஆறுமுகன் தொண்டமானால் அர சின் 100 நாள் வேலைத் திட்டத்தின் ஊடாக தலவாக்கலை நகர மக்க ளுக்கு தினமும் 24 மணி நேரமும் குடிதண்ணீர் விநியோகம் செய்யப் பட்டது.

இந்த வேலைத்திட்டத்தில் தலவாக் கலை கிறேட்வெஸ்டன் கல்கந்தவத்தை மலை அடிவாரத்தில் ஆரம்பமாகும் கல்லாறு ஆற்றின் ஒரு பகுதி மறித்து அணையிட்டு அங்கிருந்து குழாய்கள் ஊடாக தலவாக்கலை நகருக்கு சுத்த மான குடி தண்ணீர் வழங்கப்பட்டது.

சுமார் 21 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தற்போது நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினூடாக கல்கந்த வத்தை மலை அடிவாரத்தில் ஆரம்ப மாகும் கல்லாறு ஆற்றின் அணையை ஒரு அடி உயர்த்தி தண்ணீரை சுத்தீ கரித்து மேலும் குழாய்களை பொருத்தி அதனூடாக தலவாக்கலை நகருக்கு குடி தண்ணிர் வழங்க வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் கல்கந்தவத்தை தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 250 குடும்பங்கள் பாதிக்கபடுகின்றனர் என்று அத்தோட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வேலைத் திட்டத்தை உடனே நிறுத்துமாறும் முதலில் இங்கே வாழும் 250 குடும்பங்களுக்கு சுத்தமான குடி தண்ணீரை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்றும் தமக்கு முதலில் குடி தண்ணீர் வழங் கிய பின்னரே யாருக்கு வேண்டுமா னாலும் அணையிட்டு தண்ணீரை கொடுங்கள் என்றும் அத்தோட்டத் தைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ள னர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் (28) கல்கந்தவத்தை வழிப்பிள்ளை யார் ஆலயத்துக்கு முன்பாக ஆர்ப் பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதன்போது தலவாக்கலை நகரைச் சுற்றியுள்ள பல பகுதிகளுக்கு குடி தண் ணீர் வழங்கும் கல்கந்தவத்தை நீர் திட்டத்தால் தமது தேவைக்கு தண்ணீர் கிடைப்பதில்லை என்று மக்கள் கோசங் களை எழுப்பினர்.

கடும் வரட்சி காரணமாகத் தமக்கும் தண்ணீர் இல்லை எனவும் கல்கந்த வத்தை தோட்டத்தில் தற்போது சுமார் 250 குடும்பங்கள் வசித்து வருகின்றன என்றும் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மலை யகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்து தெரிவித்தனர்.

# பாடசாலை மாணவருக்கு புத்தகப் பைகள் வழங்கல்

(எம்.எம்.றம்ஸீன்)

மொகிதீன் சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பிறைந்துரைச்சேனை சாது லியா வித்தியாலய முதலாம் தர மாண வர்களுக்கான புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பிறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை யின் அதிபர் எம்.எல்.நிஜாம்தீன் தலை மையில் இந்த வருடம் முதலாம் தரத் தில் இணைந்து கொள்ளும் மாணவர் களை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் சனசமூக நிலைய நிர்வாகத்திடம் கேட்டுக் கொண் டதற்கு இணங்க கோறளைப்பற்று பிரதேச சபையின் சனசமூக உத்தி யோகத்தர்கள் ஏ.ஹாரூனின் வழிகாட் டலில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி யில் ஊக்கமளிக்கும் முகமாக பாட சாலையில் கல்வியில் இணைந்து கொண்ட சிறார்களுக்கான பாடசாலை பைகளை மொகிதீன் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் வழங்கினர்.




அதன் தலைவர் ஏ.ஜி.அஸ்லம், செயலாளர் எஸ்.ஐ.எம்.நிப்ராஸ், பொரு ளாளர் பிஸ்தாமி ரவூப், நிர்வாக உறுப் பினர் டி.கே.அனீம் ஆகியோரின் பங் களிப்புடன் இவை வழங்கி வைக்கப் பட்டன.

நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.அஹ்சாப், அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் எச்.எம்.தாஹிர், ஓட்டமாவடி தேசிய பாடசாலை அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக், பாடசாலை அபிவிருத்தி குழு தலைவர் எம்.ஆப்தீன், நூரியா ஜும்ஆ பள்ளிவாயலின் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எம்.எம்.ஹுசைன், மொகைதீன் தைக்கா பள்ளிவாசல் தலைவர் எம்.பி.எம்.றொஷான் ஆகி யோர் கலந்து கொண்டனர்.



# பாலமுனையில் ஆரம்பிக்கப்பட்ட போதை விழிப்புணர்வுத் திட்டம்!

(எம்.எப்.றிபாஸ்)



பாலமுனை ஜும்மா பெரிய பள்ளி வாசலின் ஏற்பாட்டில் அட்டாளைச் சேனை பிரதேச சபை மற்றும் அக்க ரைப்பற்று பொலிஸ் நிலையம் என்பன இணைந்து போதைப் பொருள் பாவனை மற்றும் சமூக சீர்கேடுகளை தடுக்கும் முகமாக விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஒன்றை பொது விளை யாட்டு மைதானத்தில் ஆரம்பித்து வைத்துள்ளன.

பாலமுனை பெரிய பள்ளிவாசல் தலைவர் எம்.ஏ.ஏ அன்சார் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள். அட்டாளைச்னை பிரதேச சபை செயலாளர், கிராம உத் தியோகத்தர்கள், அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள் சமூகமட்ட அமைப்புகளின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பாலமுனை பிரதேசத்திலுள்ள மைதானங்கள், கடற்கரையோரங்கள், வயல்வெளிகள் போன்ற பொது இடங்க ளில்குழுவாக போதைப்பொருள்பாவனை, சூதாட்டம் போன்ற சமூக சீர்கேடுகளை ஏற்படுத்தும் சம்பவங்களை முற்றாக தடுக்கும் முகமாக இந்தத் திட்டம் பால முனை பிரதேசத்தில் முதல் முதலாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# கிண்ணியா மத்திய கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



(எஸ். சினீஸ்கான்)

கிண்ணியா மத்திய கல்லூரியின் அபிருத்தி தொடர்பில் கலந்துரை யாடல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் தேசிய அமைப்பாளர், நாடாளு மன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் பங்களிப்புடன் நேற்று முன்தினம் (28) கிண்ணியா மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இதன் போது, தௌபீக் எம்.பியின் கோரிக்கைக்கு அமைவாக அவசர திருத்த வேலைக்காக கல்வியமைச் சால் ஒதுக்கிடு செய்யப்பட்ட மூன்று மில்லியன் ரூபாவுக்கான திருத்தப் பணிகள் தொடர்பாக விரிவாகக் கலந் துரையாடப்பட்டது.

பாடசாலையின் தேவைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்த துடன், விரைவில் தீர்வைப் பெற்றுத் தருவார் என்றும் வாக்குறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், அதிபர் நஜாத், பிரதி அதிபர் கியாஸ், தொழிநுட்ப உத்தியோகத்தர் ஹம்சாத் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.




# உணவுப் பாதுகாப்புத் தொடர்பான சட்ட விதிகளை கடைப்பிடிக்காத உணவகங்கள் மீது நடவடிக்கை!

## பிராந்திய பணிப்பாளர் சகீலா இஸ்ஸடீன் தெரிவிப்பு

**(றியாஸ் ஆதம்)**

பொது மக்களுக்கு சுகாதாரமானதும் தரமானதுமான உணவுகள் கிடைப்பதற்கு துறைசார்ந்த அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். உணவுப் பாதுகாப்புத் தொடர்பான சட்ட விதிகளைக் கடைப்பிடிக்காத உணவகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

கல்முனை பிராந்தியத்தில் உணவுகளை கையாளும் மற்றும் விற்பனை செய்யும் நிறுவனங்களின் மேம்பாடு தொடர்பாகவும் உணவுப் பாதுகாப்பு தொடர்பாகவும் நேற்று முன்தினம் புதன்கிழமை (28) துறைசார்ந்த உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உணவை விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக் கையாளும் நிறுவனங்களை மேற்பார்வை செய்வதன் நோக்கம் உணவின் தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்து பாதுகாப்பான உணவை நுகர்வோருக்கு வழங்குவதற்காகும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் உணவு நிறுவனங்களுக்கு உரிய சட்ட ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்காது நுகர்வோருக்கு தரமற்ற மற்றும் சுகாதாரமற்ற உணவுகளை வழங்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்கக்கூடாது.

குறிப்பாக ரமழான் மாத காலப் பகுதியில் தற்காலிகமான மற்றும் நடமாடும் உணவகங்கள் அமைகின்றன. இவ்வாறான உணவகங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அதன் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சம்மந்தப்பட்டவர்களை அறிவுறுத்துவது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கடமையாகும்.

சுகாதார தரப்பினரால் வழங்கப்படும் அறிவுரைகளைப் புறக்கணித்து அலட்சியமாக செயற்படும் நிறுவனங்களுக்கும், உரிமையாளர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுகாதாரமற்ற மற்றும் பாதுகாப்பற்ற உணவுகளாலும், பிழையான உணவுப் பழக்கத்தாலுமே இன்று அதிகமானோர் பல்வேறு நோய்களுக்கு ஆளாகுகின்றனர். குறிப்பாக பாடசாலை சிற்றூண்டிச்சாலைகளில் அனுமதிக்கப்படாத உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தச் சிற்றூண்டிச் சாலைகள் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். சிற்றூண்டிச் சாலைகளில் அனுமதிக்கப்பட்ட உணவுகளை மாத்திரம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.-என்றார்.

பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் அந்தப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ. எம்.பஸால், பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஏ.எஸ். எம்.ஷாபி, சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.லபீர், மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் எஸ்.ஜீவராஜா உட்பட மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

உணவு கையாளும் நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பாக சுகாதார அமைச்சின் உணவுப் பாதுகாப்பு பிரிவால் வெளியிடப்பட்ட நூல் ஒன்றும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு பிராந்தியப் பணிப்பாளரினால் வழங்கி வைக்கப்பட்டது.



# பயிர்களை நாசம் செய்யும் விலங்குகளும் பறவைகளும்

## அசௌகரியத்தில் மலையக மக்கள்

(மஸ்கெலியா)

குரங்குகள், காட்டு எருமை, மயில் போன்றவற்றால் பயிர்களை நாசம் செய்வதால் மக்கள் பெறும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

கினிகத்தேன மற்றும் நோர்வூட் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல கிராமங்களில் கால்நடைகளை சுற்றி திரிந்து பயிர்கள் அனைத்தும் நாசமாகி உள்ளதால் தாம் பாரிய பொருளாதார சிக்கலுக்கு உள்ளாகி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கினிகத்ஹேன, ரஞ்சுராவ, ஹொராகட, ஹோமாகம, லக்ஷபான, கலைவல்தெனிய, மொரஹேனகம, அபர்டீன், கிரிவநெலிய, ஹகரபிட்டிய, தொட்டல்லன, நல்லதண்ணி மற்றும் மஸ்கெலியா ஆகிய பகுதிகளில் சுற்றித்திரியும் எருமை மாடுகள், குரங்கு, மந்திகளால் விவசாயிகளின் காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்பட அனைத்து பயிர்களையும் நாசம் செய்யப்படுகின்றன.

இது சம்பந்தமாக நீண்ட காலமாக, மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பயிர்களை பாதுகாக்க பல்வேறு யுக்திகளை கையாண்ட போதிலும், அனைத்து யுக்திகளுக்கும் பழகிவிட்டதால் பயிர்செய்கைகளை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வாழை, பப்பாளி, ரம்புட்டான், முருங்ககாய், வெண்டைக்காய், பலா போன்றவற்றுடன் மற்றும் காய்கறி பயிர்கள் அறுவடைக்கு வரும் நிலையில் எருமைகள் கூட்டம் கூட்டமாகக் கிராமங்களைத் தாக்கி, சிறிது நேரத்தில் பயிர்களை நாசம் செய்து விட்டு சென்று விடுகின்றன என்றும் தெரிவிக்கின்றனர்.

குரங்குகளை விரட்ட முற்படும் போது பிரதேசவாசிகளை அவை கடிக்க முற்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த ஆபத்தான சூழ்நிலையால் குழந்தைகள் மற்றும் பெண்கள் அச்சத்தில் உள்ளனர்.

இந்த விடயத்தில் வனவிலங்கு திணைக்களத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# 'ஏ.ஆர்.எம். ஜிப்ரி ஒரு சகாப்தம்' நூல் அறிமுக நிகழ்வு ஞாயிறு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஆதரவில் மறைந்த ஒலி – ஒளிபரப்பாளரும் கல்வியலாளருமான மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு தின நிகழ்வும், 'ஏ.ஆர்.எம். ஜிப்ரி ஒரு சகாப்தம்' எனும் நூல் அறிமுக நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணி முதல் மாளிகைக்காடு பாபா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருமான சிரேஷ்ட ஒலி – ஒளி பரப்பாளர் யூ.எல். யாகூப் தலைமையில் சர்வதேசப் புகழ் ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோர் முதன்மை அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், கல்முனை பணிமனையின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹிலா எஸ். இஸ்ஸடீன், கல்முனை பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி எம். றம்ஸீன் பக்கீர், கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை அதிபர் எஸ். கலையரசன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் நிகழ்வில் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். தாஜ் நூல் அறிமுக உரையையும் நிகழ்த்துவார்.

# கல்வி நடவடிக்கைகளுக்கு இலத்திரனியல் உபகரணம்



பேத்தாளை சந்திரகாந்தன் வித்தியாலயத்தின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலையத்துக்கு உட்பட்ட சந்திரகாந்தன் வித்தியாலய நிர்வாகம் மற்றும் கல்விச் சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஒன்றுகூடல் மண்டபத்துக்கான தளபாடங்களும் வழங்கப்பட்டுள்ளன.

பேத்தாளை சந்திரகாந்தன் வித்தியாலய அதிபர் க. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சி.சந்திரகாந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கல்குடா வலைய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு க. ஜெயவதனன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜெயக்குமணன், பேத்தாளை விபுலானந்தா கல்லூரி அதிபர் முருகவேல், மிதுள் லங்கா நிறுவனத்தின் பொறியாளர்கள் நிமால் டிலால் பெனாண்டோ, ஜெய குணரத்ன, திட்டப் பணிப்பாளர்கள் ஷித்திக், ஷாபீர் உட்பட ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



எம்.எச்.எஸ். ஆர் மஜீதிய்யா
அதிபர், அஸ்-ஸீஹறா
பாடசாலை, கல்முனை.

# பிள்ளைகளிடையேயான போதைப்பொருள் தடுப்பு?

பிள்ளைகளிடையே போதைப் பொருள் ஒரு வளர்ந்து வரும் கவலையாக உள்ளது. இதில் அவசர கவனம் தேவைப்படுகிறது. பிள்ளைகளின் உடல் மற்றும் மன நலனில் போதைப் பொருள் தாக்கம் ஆழமானது. மற்றும் வாழ்நாள் முழுவதும் விளைவுகளை ஏற்படுத்தும். இந்தச் சிக்கலைத் தீர்ப்பதில் தடுப்பு முக்கியமானது. மேலும் பெற்றோர்கள், பாடசாலைகள், சமூகங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை உள்ளடக்கிய பன்முக அணுகுமுறை தேவைப்படுகிறது. இந்தக் கட்டுரையில், கல்வியின் முக்கியத்துவம், பெற்றோரின் ஈடுபாடு, சமூக ஆதரவு மற்றும் கொள்கை முயற்சிகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, குழந்தைகளிடையே போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கான பல்வேறு உத்திகளை ஆராய்வோம்.

### கல்வி

பிள்ளைகள் மத்தியில் போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. சிறு வயதிலேயே தொடங்கி, குழந்தையின் கல்விப் பயணம் முழுவதும் தொடரும் விரிவான மருந்துக் கல்வித் திட்டங்களை பாடசாலைகள் செயல்படுத்த வேண்டும்.

இந்த திட்டங்கள் வயதுக்கு ஏற்றதாகவும், ஈடுபாட்டுடன் இருக்க வேண்டும். மற்றும் போதைப்பொருள் அபாயங்கள் மற்றும் விளைவுகள் பற்றிய துல்லியமான தகவலை வழங்க வேண்டும்.

ஊடாடும் பட்டறைகள், விருந்தினர் விரிவுரைகள் மற்றும் கல்விப் பொருள்கள் ஆகியவை பாடத்திட்டத்தில் இணைக்கப்பட வேண்டும். போதைப்பொருளின் ஆபத்துகள் குறித்து குழந்தைகளுக்கு நன்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். போதைப்பொருள் துஷ்பிரயோகத்தின் உடல், உணர்ச்சி மற்றும் சமூக விளைவுகளைப் பற்றி குழந்தைகளுக்கு கற்பிப்பது அவசியம், இது சகாக்களின் அழுத்தத்தை எதிர்கொள்ளும்போது தகவலறிந்த முடிவுகளை எடுக்க அவர்களுக்கு உதவுகிறது.

### பெற்றோரின் ஈடுபாடு

போதைப்பொருள் மீதான அவர்களின் நிலைப்பாடு உட்பட, தங்கள் குழந்தைகளின் அணுகுமுறைகள் மற்றும் நடத்தைகளை வடிவமைப்பதில் பெற்றோர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். குழந்தைகள் எதிர்கொள்ளக் கூடிய சவால்களைப் புரிந்துகொள்வதற்கும் அவற்றை எதிர்கொள்வதற்கும் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையிலான திறந்த தொடர்பு முக்கியமானது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தங்கள் கவலைகளைப் பற்றி பேசுவதற்கும் வழிகாட்டுதலைப் பெறுவதற்கும் வசதியாக இருக்கும் ஒரு ஆதரவான சூழலை உருவாக்க வேண்டும்.

சாத்தியமான போதைப்பொருள் அறிகுறிகளை அங்கீகரிப்பது, பயனுள்ள தகவல் தொடர்பு உத்திகள் மற்றும் பொருத்தமான எல்லைகளை அமைப்பது குறித்து பெற்றோருக்கு கல்வி கற்பிக்கும் பெற்றோர் திட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட வேண்டும். பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டும். மேலும் அவர்களின் நண்பர்கள் மற்றும் சமூக வட்டங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். தங்கள் குழந்தைகளுடன் வலுவான உறவுகளை வளர்ப்பதன் மூலம், பெற்றோர்கள் போதை மருந்துகளின் கவர்ச்சிக்கு எதிராக ஒரு பாதுகாப்பு இடையகத்தை உருவாக்க முடியும்.

### சமூக ஆதரவு

குழந்தைகளுக்கு ஆதரவான சூழலை உருவாக்குவதில் சமூகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உள்ளூர் நிறுவனங்கள், சமூக மையங்கள் மற்றும் இளைஞர் குழுக்கள் பொழுதுபோக்கு நடவடிக்கைகள், வழிகாட்டுதல் திட்டங்கள் மற்றும் குழந்தைகளை ஈடுபாட்டுடன் மற்றும் நேர்மறையான தாக்கங்களுடன் இணைக்கும் பாடசாலைக்குப் பின் திட்டங்களை வழங்குவதற்கு ஒத்துழைக்க முடியும்.

போதைப்பொருள் அபாயங்கள் தொடர்பில் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் இருவருக்கும் கல்வி கற்பிக்க சமூகங்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்களையும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

குழந்தைகளிடையே போதைப் பொருளைத் தடுப்பதற்கான அனுபவங்களையும் உத்திகளையும் பகிர்ந்து கொள்ள, பெற்றோருக்கான ஆதரவுக் குழுக்கள் நிறுவப்படலாம். சமூக உணர்வு மற்றும் பகிரப்பட்ட பொறுப்பை உருவாக்குவதன் மூலம், போதைப்பொருள் துஷ்பிரயோகத்தின் தீங்குகளில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான கூட்டு முயற்சிக்கு சுற்றுப்புறங்கள் பங்களிக்க முடியும்.

### கொள்கை முயற்சிகள்

அரசு மற்றும் நிறுவனக் கொள்கைகள் குழந்தைகளிடையே போதைப் பொருள் துஷ்பிரயோ

தொடர்ச்சி ▼



# பிள்ளைகளிடையேயான போதைப்பொருள் தடுப்பு?

தொடர்ச்சி▲

கத்தைத் தடுப்பதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். கொள்கை வகுப்பாளர்கள் பாடசாலைகள் மற்றும் சமூகங்களில் ஆதார அடிப் படையிலான தடுப்பு திட்டங்களை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்து வதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்தத் திட்டங்கள் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் செயல்திறனை உறுதிப் படுத்த புதுப்பிக்கப்பட வேண்டும்.

போதைப்பொருள் பண்புகளைக் கொண்ட பொருள்களின் விற்பனை மற்றும் விளம்பரம் மீதான கடுமை யான கட்டுப்பாடுகள், குறிப்பாகக் குழந்தைகளை இலக்காகக் கொண் டவை அணுகல் மற்றும் வெளிப்பாட் டைக் கட்டுப்படுத்த உதவும். கூடுத லாக, போதைப்பொருளுடன் போராடும் நபர்களுக்கான சிகிச்சை மற்றும் மறுவாழ்வு திட்டங்களில் முதலீடு செய்வது அவசியம்.

எனவே, குழந்தைகள் மத்தியில் போதைப்பொருளைத் தடுப்பதற்குப் பெற்றோர்கள், கல்வியாளர்கள், சமூகங்கள் மற்றும் கொள்கை வகுப் பாளர்களின் விரிவான மற்றும் கூட்டு முயற்சி தேவைப்படுகிறது.

கல்வி, பெற்றோரின் ஈடுபாடு, சமூக ஆதரவு மற்றும் கொள்கை முயற்சிகளில் கவனம் செலுத்து வதன் மூலம், குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் பின்னடைவை வளர்க்கும் சூழலை உருவாக்க முடியும். போதைப் பொருள் துஷ்பிரயோகத்தின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வது, விழிப்புணர்வை ஊக்குவித்தல் மற்றும் அறிவு மற்றும் பொறுப்பான தேர்வுகளைச் செய்வதற்குத் தேவை யான அறிவு மற்றும் திறன்களுடன் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிப் பது முக்கியம். ஒருங்கிணைந்த மற்றும் நீடித்த முயற்சியின் மூலம், ஒவ்வொரு குழந்தையும் போதைப் பொருள் துஷ்பிரயோகத்தின் அழிவு கரமான விளைவுகளிலிருந்து பாது காக்கப்படும் எதிர்காலத்தை நாம் உருவாக்க முடியும்.

### இளைஞர் யுவதிகளிடையே போதைப்பொருள் தடுப்பு

இளைஞர்களிடையே போதைப் பொருள் என்பது தனிநபர் நல்வாழ்வு, பொது சுகாதாரம் மற்றும் சமூகங்க ளின் ஒட்டுமொத்த கட்டமைப்பின் மீதான தொலை நோக்கு விளைவு களுடன் குறிப்பிடத்தக்க சமூக அக் கறையாகும். போதைப்பொருள் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு இளைஞர்களின் போதைப்பொருள் பயன்பாட்டுக்குப் பங்களிக்கும் பல்வேறு காரணிகளை நிவர்த்தி செய்யும் பன்முக மற்றும் விரிவான அணுகுமுறை தேவைப்படுகிறது. கல்வி, சமூக ஈடுபாடு, பெற்றோரின் வழிகாட்டுதல் மற்றும் கொள்கைத் தலையீடுகளை வலியுறுத்தும் பயனுள்ள தடுப்பு உத்தியின் முக் கிய கூறுகளை இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

### கல்வி ஒரு அடித்தளமாக

இளைஞர்களிடையே போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. விரிவான மற்றும் வயதுக்கு ஏற்ற மருந்து கல்வித் திட்டங்கள் சிறுவய திலிருந்தே பாடசாலை பாடத் திட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இந்தத் திட்டங்கள் வெறுமனே பொருள் துஷ்பிரயோ கத்தின் ஆபத்துக்களைத் தெரி விப்பதைத் தாண்டிச் செல்ல வேண்டும். முடிவெடுத்தல், தகவல் தொடர்பு மற்றும் மன அழுத்த மேலாண்மை போன்ற அத்தியாவ சிய வாழ்க்கைத் திறன்களை வளர்ப்பதிலும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

போதைப்பொருள் துஷ்பிரயோ கத்தின் விளைவுகளை அனுபவித்த நபர்களின் நிஜ வாழ்க்கை காட்சிகள் மற்றும் சான்றுகளை உள்ளடக் கிய, ஊடாடும் மற்றும் ஈடுபாட்டுடன் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும். மேலும், இந்தத் தகவ லைத் திறம்பட வழங்குவதற்கும், மாணவர்கள் தங்கள் கவலைகளைப் பற்றி விவாதிப்பதற்கும் வழிகாட்டு தலைப் பெறுவதற்கும் திறந்த மற்றும் நியாயமற்ற சூழலை வளர்ப்பதற்கும் கல்வியாளர்கள் போதுமான பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

### சமூக ஈடுபாடு மற்றும் ஆதரவு

போதைப்பொருளைத் தடுப்ப தற்குப் பாடசாலைகள், குடும்பங்கள், சமூக அமைப்புகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளை உள்ளடக்கிய கூட்டு முயற்சி தேவைப்படுகிறது. சமூக அடிப்படையிலான திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் கூடுதல் ஆதரவு அடுக்குகளை வழங்க முடியும். இது நேர்மறை நடத்தைகள் மற்றும் மதிப்புகளை வலுப்படுத்தும் வலை யமைப்பை உருவாக்குகிறது.

சமூக மையங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பிற பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் இளை ஞர்களுக்கு ஆக்கப்பூர்வமான மற்றும் ஆரோக்கியமான முயற்சி களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு களை வழங்குகின்றன. இது போதைப் பொருளுடன் சலிப்பு – உந்துதல் சோதனையின் வாய்ப்பைக் குறைக்கிறது. இந்த திட்டங்கள் வழிகாட்டுதலுக்கான தளங்களாகவும் செயல்பட முடியும்.அங்கு மூத்த சமூக உறுப்பினர்கள், இளைய நபர்களுக்கு வழிகாட்டுதலையும் ஆதரவையும் வழங்குகிறார்கள்.

நேர்மறையான சமூக உறவுகளை

தொடர்ச்சி▼

# பிள்ளைகளிடையேயான போதைப்பொருள் தடுப்பு?

தொடர்ச்சி▲

வளர்ப்பதிலும், போதைப் பொருள் இல்லாத வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதிலும், தடுப்பு முயற்சிகளில் தீவிரமாகப் பங்கேற்பதிலும் உள்ளூர் சட்ட அமுலாக்கப் பங்கு வகிக்க முடியும். சமூக உணர்வு மற்றும் பகிரப்பட்ட பொறுப்புணர்வை உருவாக்குவதன் மூலம், போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கான அடித்தளம் பலப்படுத்தப்படுகிறது.

## பெற்றோரின் வழிகாட்டுதல்

போதைப் பொருள் பாவனை குறித்த பிள்ளைகளின் மனோபாவத்தை வடிவமைப்பதில் பெற்றோர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இளைஞர்கள் தங்கள் கவலைகளைப் பற்றி பேசுவதற்கும் வழிகாட்டுதலைப் பெறுவதற்கும் வசதியாக இருக்கும் சூழலை உருவாக்குவதில் பெற்றோர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் இடையே திறந்த மற்றும் நேர்மையான தொடர்பு அவசியம். போதைப் பொருள் துஷ்பிரயோகத்தின் எச்சரிக்கை அறிகுறிகளைப் பற்றி பெற்றோருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் மற்றும் சாத்தியமான ஆபத்து காரணிகளை நிவர்த்தி செய்வதில் முனைப்புடன் இருக்க வேண்டும்.

பெற்றோரின் ஈடுபாடு தகவல் தொடர்புக்கு அப்பாற்பட்டது. தெளிவான எதிர்பார்ப்புகளை அமைத்தல், எல்லைகளை நிறுவுதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இளைஞர்கள் போதைப்பொருள் வலையில் விழுவதைத் தடுக்க உதவும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் சமூக வட்டங்களைப் பற்றி அறிந்திருப்பது மற்றும் நேர்மறையான சக உறவுகளை வளர்ப்பது அவசியம். கூடுதலாக, பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுடன் தொடர்புடைய அபாயங்கள் மற்றும் அவற்றை முறையாகப் பாதுகாத்தல் மற்றும் அகற்றுவதன் முக்கியத்துவம் குறித்து பெற்றோருக்குக் கற்பிக்கப்பட வேண்டும்.

## கொள்கை தலையீடுகள்

உள்ளூர், மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் உள்ள கொள்கை தலையீடுகள் இளைஞர்களிடையே போதைப்பொருள் பாவனையை ஊக்கப்படுத்தும் சூழலை உருவாக்குவதில் கருவியாக உள்ளன. ஒழுங்குமுறை நடவடிக்கைகளில் புகையிலை மற்றும் ஆல்கஹால் விற்பனையில் கடுமையான கட்டுப்பாடுகள், அத்துடன் வயது சரிபார்ப்பு முறைகளை செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும். கூடுதலாக, போதைப் பொருள் கடத்தல் மற்றும் விநியோகத்தை கட்டுப்படுத்த சட்ட அமலாக்க முயற்சிகளை வலியுறுத்தும் வகையில், சட்டவிரோத பொருள்களின் கிடைக்கும் தன்மை மற்றும் அணுகல் ஆகியவற்றை கொள்கைகள் கவனிக்க வேண்டும்.


பாடசாலைகளில் விரிவான மருந்துக் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும். பாடத்திட்ட வழிகாட்டுதல்கள் நிலைத்தன்மையையும் செயல்திறனையும் உறுதி செய்ய நிறுவப்பட்டுள்ளன. சமூக அடிப்படையிலான தடுப்புத் திட்டங்கள் மற்றும் சிகிச்சை வசதிகளை ஆதரிக்க அரசாங்கங்கள் ஆதாரங்களை ஒதுக்க வேண்டும். பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் போதைப்பொருள் தொடர்பான பிரச்சினைகளுக்கு உதவி தேடுவதோடு தொடர்புடைய களங்கத்தை குறைக்கவும், கிடைக்கக்கூடிய ஆதரவு சேவைகளை அணுகுவதற்கு தனிநபர்களை ஊக்குவிக்கவும் பயன்படுத்தப்படலாம்.

எனவே, இளைஞர்களிடையே போதைப்பொருளைத் தடுப்பதற்கு, ஒரு இளைஞனின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைக் கையாளும் ஒரு விரிவான மற்றும் கூட்டு அணுகுமுறை தேவைப்படுகிறது. கல்வி, சமூக ஈடுபாடு, பெற்றோரின் வழிகாட்டுதல் மற்றும் கொள்கைத் தலையீடுகள் ஆகியவை இளைஞர்களை போதைப்பொருள் அபாயங்களிலிருந்து விலக்கி வைக்கும் ஒரு ஆதரவான சூழலை உருவாக்குவதற்கு இணைந்து செயல்பட வேண்டும். இந்த உத்திகளில் முதலீடு செய்வதன் மூலம், சமூகம் இளைய தலைமுறையினருக்கு தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும், ஆரோக்கியமான உறவுகளை வளர்க்கவும், போதைப்பொருளின் கவர்ச்சிக்கு எதிராக பின்னடைவை உருவாக்கவும் முடியும். இறுதியில், ஒவ்வொரு இளைஞனும் ஆரோக்கியமான, உற்பத்தித்திறன் மற்றும் போதைப்பொருள் இல்லாத தனிநபராக வளர வாய்ப்புள்ள ஒரு சமூகத்தை உருவாக்குவதே குறிக்கோள்.

## பெண்கள் எவ்வாறு பங்களிக்கலாம்?

போதைப்பொருள் துஷ்பிரயோகம் என்பது தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களை பாதிக்கும் உலகளாவிய கவலையாகும். இந்த தொற்றுநோயை எதிர்த்துப் போராட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், போதைப் பொருளைத் தடுப்பதில் பெண்கள் வகிக்கக் கூடிய குறிப்பிடத்தக்க பங்கை அங்கீகரிப்பது மிகவும்

தொடர்ச்சி▼



# பிள்ளைகளிடையேயான போதைப்பொருள் தடுப்பு?

தொடர்ச்சி▲

முக்கியமானது.

இந்த முயற்சியில் பெண்களுக்கு அதிகாரமளிப்பது என்பது போதைப் பொருளுக்குப் பங்களிக்கும் தனிப் பட்ட மற்றும் சமூக காரணிகளை நிவர்த்தி செய்வதாகும்.

போதைப்பொருள் துஷ்பிரயோ கத்தின் ஆபத்துகள் குறித்து தங்க ளுக்கும், தங்கள் குடும்பங்களுக்கும், தங்கள் சமூகங்களுக்கும் கல்வி கற்பிக்கும் சக்தி பெண்களுக்கு உள் ளது. போதைப்பொருள் விளைவு களைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதலை வளர்ப்பதன் மூலம், பெண்கள் தடுப்புக்கான அடித் தளத்தை உருவாக்க முடியும்.

## குடும்பக் கல்வி

பெண்கள் பெரும்பாலும் குடும்பங் களில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள், மனப்பான்மை மற்றும் நடத்தை களை வடிவமைப்பதில் செல்வாக்கு செலுத்துகிறார்கள். போதைப் பொருளுடன் தொடர்புடைய அபா யங்களைப் பற்றிக் குடும்ப உறுப் பினர்களுக்கு, குறிப்பாக குழந்தை களுக்குக் கற்பிப்பது மிக முக்கிய மானது. குடும்பத்துக்குள் திறந்த உரையாடல் ஒரு ஆதரவான சூழலை உருவாக்குகிறது. அங்கு குழந்தை கள் தங்கள் கவலைகளைப் பற்றி விவாதிக்கவும், வழிகாட்டுதலைப் பெறவும் வசதியாக உணர்கிறார்கள்.

## பாடசாலை, சமூக நிகழ்ச்சிகள்

போதைப்பொருளின் ஆபத்துகள் குறித்து தனிநபர்களுக்கு கல்வி கற்பிக்கும் பாடசாலை மற்றும் சமூகம் சார்ந்த திட்டங்களில் பெண்கள் தீவிரமாக பங்கேற்கலாம் மற்றும் ஆதரிக்கலாம். பாடசாலைகளில் தன்னார்வத் தொண்டு செய்தல், பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களுடன் ஈடுபடுதல் மற்றும் போதைப்பொருள் இல்லாத வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் சாராத செயல்பாடு களுக்கு ஆதரவு அளித்தல் ஆகி யவை தடுப்பு முயற்சிகளுக்கு குறிப் பிடத்தக்க பங்களிப்பை அளிக்கும்.

## சமூக ஈடுபாடு

சமூக முயற்சிகளில் பெண்களின் ஈடுபாடு ஒரு ஆதரவான மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு சூழலை வளர்ப்பதற்கு அவசியம். போதைப் பொருள் பாவனையை ஊக்கப்படுத் தும் சமூக உணர்வை உருவாக்க பெண்கள் பல்வேறு வழிகளில் பங் களிக்க முடியும்.

போதைப்பொருளுடன் போராடும் நபர்களுக்கு ஆதரவை வழங்கும் உள்ளூர் திட்டங்களில் பெண்கள் தீவிரமாகப் பங்கேற்கலாம் அல்லது தொடங்கலாம். ஆதரவுக் குழுக்களை ஒழுங்கமைத்தல், மறுவாழ்வு விழிப் புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு கொள்கை களை செயல்படுத்த உள்ளூர் அதி காரிகளுடன் ஒத்துழைத்தல் ஆகி யவை இதில் அடங்கும்.

## வழிகாட்டுதல், முன்மாதிரி

பெண்கள் தங்கள் சமூகங்களுக் குள் வழிகாட்டிகளாகவும் நேர்மறை யான முன்மாதிரியாகவும் பணி யாற்ற முடியும். ஆரோக்கியமான மற்றும் போதைப்பொருள் இல்லாத வாழ்க்கை முறையை நிரூபிப்பதன் மூலம், பெண்கள் மற்றவர்களை, குறிப்பாக இளைய தலைமுறையி னரை, பொறுப்பான தேர்வுகளை செய்ய ஊக்குவிக்க முடியும். வழி காட்டுதல் திட்டங்கள் போதைப் பொருள் வலையில் விழும் அபாயத் தில் உள்ள நபர்களுக்கு வழிகாட்டு தலையும் ஆதரவையும் வழங்க முடியும்.

பரந்த அளவில் போதைப் பொருள் தடுப்புக்கு பங்களிக்கும் பெண்க ளுக்கு பரிந்துரைத்தல் ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும். கொள்கைகள் மற்றும் சமூக அணுகு முறைகளில் செல்வாக்கு செலுத்துவதன் மூலம், போதைப்பொருள் பிரச்சினைகளை பெண்கள் தீர்க்க முடியும்.

தடுப்பு, சிகிச்சை மற்றும் மறு வாழ்வு ஆகியவற்றில் கவனம் செலுத் தும் கொள்கைகளுக்கு வாதிடுவதில் பெண்கள் தீவிரமாகப் பங்கேற்க லாம். போதைப்பொருள் துஷ்பிர யோகத்துடன் போராடும் தனிநபர் களுக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் ஆதரவு சேவைகளுக்கான அணு கலை மேம்படுத்தும் சட்டத்தை ஆத ரிப்பது இதில் அடங்கும்.

போதைப் பழக்கத்துடன் தொடர் புடைய சமூக இழிவுகளை சவால் செய்வதில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்க முடியும். பச்சாதாபம் மற்றும் புரிதலை வளர்ப்பதன் மூலம், தீர்ப்பு அல்லது பாகுபாடுகளுக்கு அஞ்சா மல் தனிநபர்களை உதவி பெற ஊக்குவிக்கும் மிகவும் இரக்கமுள்ள சமூகத்தை உருவாக்க பெண்கள் பங்களிக்க முடியும்.

கல்வி, சமூக ஈடுபாடு மற்றும் வக்காலத்து மூலம் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதில் பெண்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்ய முடியும். இந்தப் பகுதிகளில் பெண் களுக்கு அதிகாரம் அளிப்பது, போதைப்பொருள் துஷ்பிரயோகம் தொடர்பான உடனடி கவலைகளை நிவர்த்தி செய்வது மட்டுமல்லாமல், ஆரோக்கியமான மற்றும் அதிக நெகிழ்ச்சியான சமூகங்களை உருவாக்குவதற்கும் பங்களிக்கிறது. பெண்களின் தனித்துவமான பலம் மற்றும் செல்வாக்கு ஆகியவற்றை அங்கீகரித்து பயன்படுத்துவதன் மூலம், போதைப்பொருள் பிரச்சி னையை எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு விரிவான அணுகு முறையை உருவாக்க முடியும். இறுதியில், போதைப்பொருள் ஆபத்துக்க ளுக்கு அடிபணியாமல் தனிநபர்கள் செழித்து வளரக்கூடிய ஒரு சமூ கத்தை உருவாக்குவதற்கு ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரையும் உள்ளடக்கிய கூட்டு முயற்சி முக் கியமானது.






# பா.ஜ.க. முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியல்: மோடி தலைமையில் முக்கிய ஆலோசனை

எதிர்வரும் மக்களவைத் தேர்தலுக்கான பா.ஜ.க. முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியலை இறுதி செய்வது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் முக்கிய ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதற்காக, பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ.க. மத்திய தேர்தல் குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மக்களவைத் தேர்தலுக்கான பா.ஜ.க. முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியலை இறுதி செய்வது தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவு 10.30 மணிக்குத் தொடங்கிய இந்த ஆலோசனை 4 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜெ.பி. நட்டா, மத்திய அமைச்சர் அமித் ஷா, ராஜ்நாத் சிங், உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், மகாராஷ்டிரா துணை முதல்வர் தேவேந்திர பட்நாவிஸ், குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், மத்தியப் பிரதேச முதல்வர் மோகன் யாதவ், சத்தீஸ்கர் முதல்வர் விஷ்ணு தியோ சாய், உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மக்களவைத் தேர்தலுக்கான திகதிகளை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவிப்பதற்கு முன்னதாகவே பா.ஜ.க. தனது முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட ஆயத்தமாகி வருவதாகக் கூறப்படுகிறது. இந்தச் சூழலிலேயே நேற்றைய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதுவும் குறிப்பாக, மக்களவைத் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்படும் முன்னதாக உத்தரப் பிரதேசத்தில் தனது செல்வாக்கு குறைந்த மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியலை முதலில் வெளியிட பா.ஜ.க. திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, கட்சியின் தேசியத் தலைவர் நட்டா, உபி முதல்வர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் பா.ஜ.கவுக்கு சாதகமற்ற தொகுதிகள் பற்றி ஆலோசனை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பா.ஜ.க. வேட்பாளர்கள் பட்டியல் எப்போதுமே கவனம் பெறும். காரணம். ஏனெனில், அதன் பட்டியலில் தெரிந்த பிரபலமான முகங்களைக் கூட கைவிட்டுவிட்டு புதிய முகங்களுக்கு வாய்ப்பு கொடுப்பது என்பது சாதாரணமாக நடந்துவிடும். அதனால் மக்களவைத் தேர்தல் 2024 இற்கான பா.ஜ.கவின் முதல் வேட்பாளர் பட்டியல் எதிர்பார்ப்பைப் பெற்றுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான அறிவிப்பு மார்ச் 2 ஆவது வாரத்தில் வெளியிடப்பட்டு தேர்தல் ஏப்ரல் 2 ஆவது வாரம் தொடங்கி நடத்தப்படலாம் என ஊகங்கள் நிலவுகின்றன.

# மொரிஷியஸில் புதிய விமான தளம்: பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்




மொரிஷியஸின் அகலேகா தீவில் புதிய விமான தளம், படகுத் துறையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கிவைத்தார்.

ஆபிரிக்க கண்டத்தின் தென்கிழக்கு கடலோர பகுதியில் மொரிஷியஸ் நாடு அமைந்துள்ளது. தீவு நாடான அங்கு 13 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இதில் 70 சதவீதமானோர் இந்திய வம்சாவளியினர் ஆவர். அந்த நாட்டு மக்கள் தொகையில் தமிழ் வம்சாவளியினர் 6 சதவீதம் பேர் உள்ளனர். மொரிஷியஸின் தற்போதைய பிரதமராக இந்திய வம்சாவளியை சேர்ந்த பிரவிந்த் ஜுக்நாத் பதவி வகிக்கிறார்.

இதன்காரணமாக இந்தியா, மொரிஷியஸ் இடையே நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. இந்தியாவின் உதவியுடன் மொரிஷியஸின் அகலேகா தீவில் புதிய விமான தளம் அமைக்கப்பட்டு உள்ளது. உலகின் ஒட்டுமொத்த கடல் வர்த்தகத்தில் 35 சதவீத வர்த்தகம் அகலேகா தீவுப் பகுதி வழியாக நடைபெறுகிறது.

அந்த தீவில் அமைக்கப்பட்டுள்ள விமான தளம், பயணிகளுக்கான விமான தளம் என்று மொரிஷியஸ் அரசு அறிவித்துள்ளது. ஆனால் இது இந்தியாவின் மறைமுக விமானப் படைத் தளம் என்றும் இந்திய பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த மொரிஷியஸில் நவீன விமானப் படைத் தளத்தை இந்தியா அமைத்திருக்கிறது என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த பின்னணியில் அகலேகா தீவில் புதிய விமான தளம், படகுத் துறை மற்றும் 6 சமூக மேம்பாட்டுத் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி, மொரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜுக்நாத் ஆகியோர் நேற்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்தனர்.



# இமாச்சலப் பிரதேசத்தில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட 6 எம்.எல்.ஏக்கள் உயர் நீதிமன்றத்தை நாட முடிவு

இமாச்சலப் பிரதேசத்தில் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் சபாநாயகர் குல்தீப் சிங் பதனியாவால் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள 6 காங்கிரஸ் எம்.எல்.ஏக்களும் தங்களின் மீதான நடவடிக்கையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தை நாட முடிவு செய்துள்ளனர்.

முன்னதாக நேற்று இமாச்சல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராஜிந்தர் ராணா, சுதிர் சர்மா, இந்தர் தத் லகன்பால், தேவிந்தர் குமார் பூடோ, ரவி தாக்கூர் மற்றும் சேதன்யா சர்மா ஆகிய 6 எம்.எல்.ஏக்களை கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்கம் செய்து சட்டப்பேரவை தலைவர் உத்தரவிட்டார்.

பின்னர் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"இமாச்சல பிரதேச மாநிலத்தின் ஒரே ஒரு தொகுதிக்கு நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 6 எம்.எல்.ஏக்கள் கட்சி மாறி பா.ஜ.கவுக்கு வாக்களித்தனர். மேலும், சட்டப்பேரவையில் நடைபெற்ற பட்ஜெட் மீதான வாக்கெடுப்பின் போதும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

இதன் காரணமாக, அரசுக்கு எதிராக செயல்பட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 6 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது, உடனடியாக அமலுக்கு வருகிறது. கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" – என்றார்.

இந்த நிலையில், சபாநாயகரின் தகுதி நீக்க நடவடிக்கையை எதிர்த்து 6 அதிருப்தி எம்.எல்.ஏக்கள் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய உள்ளனர். இதனிடையே மாநிலத்தின் அமைச்சர் ஒருவர் ஹோட்டல் ஒன்றில் நேற்றிரவு அதிருப்தி எம்.எல்.ஏகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகுதி நீக்க நடவடிக்கையைத் தொடர்ந்து சம்மந்தப்பட்ட எம்.எல்.ஏக்களின் தொகுதிகள் வெற்றிடமாகியுள்ளன. இதனால் இமாச்சல் சட்டப் பேரவையில் காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை 40 இருந்து 34 ஆக குறைந்துள்ளது. பா.ஜ.க. வசம் 25 எம்.எல்.ஏக்கள் உள்ளனர்.

சட்டப்பேரவையில் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை இருந்தும் இமாச்சலப் பிரதேசத்தின் ஒரே ஒரு மாநிலங்களவைக்கான இடத்தில் பா.ஜ.க. வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவால் இந்தத் தகுதி நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள 6 காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் தங்களின் மீதான நடவடிக்கையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவுள்ளனர் என இன்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இண்டியா கூட்டணியில் அ.தி.மு.க: வைகைச் செல்வன் பரபரப்பு தகவல்

இண்டியா கூட்டணியில் அ.தி.மு.க. இணைவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், சேலத்தில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமியை, அ.தி.மு.க. கொள்கை பரப்பு செயலாளர் வைகைச்செல்வன் நேற்று சந்தித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் வைகைச் செல்வன் கருத்து தெரிவிக்கையில்,

"அ.தி.மு.க. கூட்டணி குறித்த பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்று வருகிறது. தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணியில் கசப்பு ஏற்பட்டுள்ளது.

அதற்கான மருந்து அதிமுகவுடன் இருப்பதாக காங்கிரஸ் நம்பினால் விரைவில் நல்ல முடிவு எட்டப்படும். இண்டியா கூட்டணியில் அ.தி.மு.க. இணைவதற்கு வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து இரண்டு நாள்களுக்குள் பதில் கிடைக்கும்.

த.மா.கா, பா.ஜ.கவுடன் உறவில் தான் இருந்தார்கள். தற்போது பா.ஜ.கவுடன் த.மா.கா. இணைந்துள்ளது. அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து, த.மா.கா. பிரிந்ததால் தாக்கம் ஏதும் இருக்காது.



மக்களவைத் தேர்தலுக்காக மிகப்பெரிய வியூகங்களை அமைப்பதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. ஓ.பி.எஸ். தரப்புக்கு, கடைசி வாய்ப்பாக பா.ஜ.கவுடன் இணைவதற்கு மட்டும் தான் வாய்ப்பு உள்ளது. ஆனால், அங்கும் சில சிக்கல்கள் இருப்பதாக தகவல் வந்துள்ளன," – என்றார்.




# பங்களாதேஷ் தலைநகரில் தீ விபத்து: 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

பங்களாதேஷில் கட்டடமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 40 இற்கும் அதிக மானவர்கள் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

அந்நாட்டின் தலைநகர் டாக்காவில் உள்ள ஏழு மாடிகளைக் கொண்ட உணவு விடுதியொன்றில் வேகமாக தீ பரவியதன் காரணத்தினால் உயிரி ழப்புகள் ஏற்பட்டுள்ளன.

மேற்படி உணவகத்திலிருந்து 75 இற்கும் அதிகமானவர்கள் காப்பாற்றப் பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இரண்டு மணிநேர போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை, டாக்கா மருத்துவக்கல் லூரி மருத்துவமனையில் சிறுவர்கள் உட்பட 33 பேரின் உடல்கள் உள்ளன.

அத்துடன், நகரின் மற்றுமொரு மருத்துவமனையில் பத்து பேர் உயிரிழந் துள்ளனர். 20 இற்கும் அதிகமானவர் கள் ஆபத்தான நிலையில் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு கசிவினால் தீ விபத்து ஏற்பட் டிருக்கலாம் என அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

இந்த கட்டடத்தின் ஒவ்வொரு தளத்தி லும் எரிவாயு சிலிண்டர்கள் காணப்பட்ட தனால் அந்த கட்டிடம் மிகவும் ஆபத்தா னதாக காணப்பட்டதாக தெரிவித்துள் ளது.

இந்த விபத்து குறித்து அந்நாட்டு சுகாதார அமைச்சர் சமந்தா லால் சென் இன்று காலை செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“சரியாக நேற்றிரவு 9.50 மணிக்கு அந்தக் கட்டடத்தில் உள்ள உணவகம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அது அடுத்தடுத்த தளங்களுக்கும் பரவியது. மேல் தளங்களிலும் உணவகங்கள், துணிக் கடைகள் இருந்தன. இதனால் தீ இன்னும் எளிதாகப் பற்றிப் பரவியது.

13 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட் டன. கடுமையான போராட்டங்களுக்கு மத்தியில் தீயணைப்பு வீரர்கள் 75 பேரை வெளியேற்றினர், இவர்கள் 42 பேர் மயங்கிய நிலையில் இருந்தனர். டாக்கா மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 33 பேர் இறந்தனர். 10 பேர் அருகிலுள்ள ஷேக் ஹசினா தேசிய தீக்காய சிகிச்சை மையத்தில் உயிரி ழந்தனர். 22 பேர் தீவிர தீக்காயங்க ளுக்கான சிகிச்சை பெற்று வருகின்ற னர். காயமடைந்தவர்கள் தீவிர சுவாசக் கோளாறும் ஏற்பட்டுள்ளது.” – என்றார்.

இந்த விபத்தில் மேலும் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. சடலங்கள் பல அடையாளம் காண இயலாத அளவுக்கு எரிந்துள்ளன என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர்வாசிகள் விபத்து குறித்து கூறுகையில்,

“அந்தக் கட்டடம் மிகவும் ஆபத்தான தாகவே கருதப்பட்டது. ஒவ்வொரு தளத் திலும் காஸ் சிலிண்டர்கள் உண்டு. படிகளில் கூட சிலிண்டர்கள் அடுக்கி வைத்திருப்பார்கள். அதனால் அது ஆபத்தான கட்டிடமாகவே இருந்தது” –என்றனர்.

விபத்துக்கான காரணம் இன்னும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த தீ விபத்து டாக்கா மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.





# நேட்டோ துருப்புகளை அனுப்பினால் அணு ஆயுதப் போர் தொடங்கும்

## ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை

நேட்டோ நாடுகள் உக்ரைனுக்கு தங்கள் துருப்புகளை அனுப்பினால், அணு ஆயுதப் போர் தொடங்கும் என்று புடின் எச்சரித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே மேற்கண்ட எச்சரிக்கை விடுத்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



“மேற்கத்திய நாடுகள் ஆதிக்க மனப் பான்மையுடன் நமது வளர்ச்சியை முடக்க முயன்று வருகின்றன. அது மட்டுமல்ல, அவர்கள் நம்மை அழிக்க வும் பார்க்கின்றனர். அவர்கள் நோக்கம் எதுவாக இருந்தாலும் நமது நாட்டையும் உக்ரைனையும் அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தி கொள்வதில்தான் முனைப்பு காட்டுகின்றனர். நமக் கிடையே பிளவை ஏற்படுத்தி நம்மை வலிமை குறைந்தவர்களாக உருவாக்க முயல்கின்றனர்.

பெரும்பாலான ரஷ்ய மக்கள் உக் ரைனில் சிறப்பு இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டதை வரவேற்கிறார்கள். ரஷ்ய குடிமக்கள்தான் நமது சுதந் திரத்தையும் உரிமைகளையும் பாது காக்க வேண்டும். நமது எதிர்காலம் செல்லும் திசை குடிமக்களாகிய உங்கள் கைகளில்தான் உள்ளது.

அரேபிய நாடுகள் மற்றும் லத்தீன் நாடுகளுடன் நமது உறவை நாம் வலுப்படுத்தி கொள்ள வேண்டும்.

நேட்டோ நாடுகள் உக்ரைனுக்கு தங்கள் படைகளை அனுப்பினால், அணு ஆயுதப் போர் தொடங்கும். நேட் டோவில் பின்லாந்தும், சுவீடனும் இணைவதால் ரஷ்யாவின் மேற்கு பிராந்தியத்தை நாம் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

எந்த எதிரி நாட்டின் எல்லைக்கு உள்ளேயும் சென்று அழிக்க கூடிய ஆயுதங்கள் நம்மிடையே உள்ளன. ரஷ்யாவை ஆக்கிரமிக்க எவரேனும் முனைந்தால் இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட பாதிப்புகளை விட கடுமையான பாதிப்புகள் உருவாகும்.” – என்றார்.

# ஆயுதங்களுக்கு பதில் உணவு: வடகொரியா - ரஷ்யா ஒப்பந்தம்

வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்களை வாங்க ரஷ்யா தயாராக இருப்பதாகவும், அந்த ஆயுதங்களுக்கு ஈடாக வடகொரியாவுக்கு உணவு வழங்கவும் விருப்பம் தெரி வித்துள்ளது.

வடகொரியா தனது இராணுவத்திற்கு முன்னுரிமை அளிப்பதால் ஆயுதங்களை உற்பத்தி செய்கிறது. ஏராளமான ஆயுதங்கள் இருந்தபோதிலும், வட கொரியர்கள் உணவு நெருக்கடியால் அவதிப்பட்டு வருகின்றனர்.

ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளுக்கு ஈடாக வட கொரியாவுக்கு உணவு வழங்க ரஷ்யா விருப்பம் தெரி வித்துள்ளதாக தென் கொரிய உளவுத்துறை அமைப்புகள் கூறுகின்றன.

வடகொரியாவின் ‘தன்னிச்சையான’ ஏவுகணைத் திட்டத்தால், மேற்கத்திய நாடுகள் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இதனால் உலக நாடுகளிடம் இருந்து வடகொரியா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.



இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சிறப்புக் குழுவை வடகொரியாவுக்கு அனுப்பியுள்ளார்.

வடகொரியாவும் ரஷ்யாவும் அண்டை நாடுகள். ரஷ்ய ஜனாதிபதி புடினும் வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன்னும் நெருங்கிய நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 04

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 01/03/2024

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் பனிச்சரிவு அபாய எச்சரிப்பு

பிரிட்டிஷ் கொலம்பியா, மார்ச்01
பிரிட்டிஷ்கொலம்பியா உள்பகுதியின் பரந்த பகுதிகள் உள்ளடங்கலாக அல்பர்ட்டாவின் சில பகுதிகளுக்கு பனிச்சரிவு கனடா எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 02



# பிரம்டன் நகரசபையில் தமிழ் நினைவுத் தூபி!

## இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக

ஓன்ராரியோ, மார்ச் 01
இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தில் உயிரி ழந்தவர்களுக்கான தமிழ் நினைவுத்தூபியை நிர்மாணிப்பதற்கு பிரம்டன் நகர சபை தீர்மா னித்துள்ளது. மூன்று வருடங்களின் பின்னர் பிரம் டன் நகர சபையினால் 'தமிழ் இனப் படுகொலை நினைவுத் தூபிக்கான' இறுதி வடிவம் நிறைவேற்றப்பட் டுள்ளது. 02

# சுகாதாரம்,கல்விக்கு அதிகரித்த நிதி அல்பேர்ட்டா மாநிலத்தில் ஒதுக்கீடு!

அல்பேர்ட்டா, மார்ச்01
அல்பேர்ட்டா மாநிலத்தின் புதிய வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரம் மற்றும் கல்விக்கு அதிகரித்த நிதி ஒதுக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார பராமரிப்பில் 4.4 சதவீதம் நிதி அதிகரிக் கப்படவுள்ளதுடன், வைத்தியர்களுக்கான அணுகும் வசதியை இலகுவாக்கி, அவசர சிகிச்சை நிலையங்களில் காத்திருக்கும் நேரத்தை குறைப்பது தொடர்பில் இந்த மேலதிக நிதி செலவிடப்படும் என அல்பேர்ட்டா மாநில நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும், எட்மன்டன் தெற்குப் பகுதிக்கான வைத்தியசாலை நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும், மாநிலத்தின் தலைநகரில் நிர்மாணிக்கப்படவுள்ள தனியான சிறுவர் வைத்தியசாலைக்கான நிர்மாண ஆரம்பத் திகதி குறித்த தகவல்களும் வெளியிடப்படவில்லை எனவும் தெரிகின்றது.



கல்விக்கான நிதி அதிகரிப்பு, புதிய ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்களை ஆள்சேர்ப்பதற்காக பயன்படுத் தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கியூபெக் மாநில மதச்சார்பின்மை சட்டம் அரசமைப்புக்கு உட்பட்டது எனத் தீர்ப்பு!

## அந்த மாநில மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு



கியூபெக், மார்ச்01

கியூபெக் மாநிலத்தின் மதச்சார்பின்மை சட்டம் அரசமைப்புக்கு உட்பட்டது என கியூபெக் மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சட்டமூலம் 121 என அறியப்படும் இந்த சட்டத்தில் இருந்து ஆங்கில பாடசாலை சபைகளை விலக்கிய கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறானது எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

அதிகம் எதிர்பார்க்கப்பட்ட - ஆசிரியர்கள், நீதிபதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்கலாக அதிகாரத்தில் உள்ள பொது ஊழியர்கள் பணியின் போது மதச் சின்னங்களை அணிவதனை தடை செய்யும் - இந்த சட்டம் குறித்த மேன்முறையீடு தொடர்பில் இந்தத் தீர்ப்பு வெளியாகியுள்ளது.

இது கியூபெக் மாநில அரசாங்கத்திற்கு கிடைத்த பெரும் வெற்றியாகக் கருதப்படுகின்றது.

கியூபெக் அரசாங்கத்தின் மாநிலத்திற்கான தீர்மானங்களை எடுப்பதற்கான உரிமையை நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதி செய்துள்ளதாக கியூபெக் முதல்வர் தெரிவித்துள்ளார்.

### பிரம்டன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று வருடங்களுக்கு முன்னர் பிரம்டன் நகர சபை இந்த நினைவுத் தூபியை நிர்மாணிப்பதற்கு உறுதியளித்த போதிலும், அதற்கான வடிவம் நேற்று முன்தினம் பெப்ரவரி 28ஆம் திகதியே பிரம்டன் நகர சபையினால் நிறைவேற்றப்பட்டது.

2021ஆம் ஆண்டில், மேயர் பெட்ரிக் பிறவுணினால் தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபியை அமைப்பதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட யுத்தத்தால் உயிரிழந்த தமிழ் மக்களை நினைவு கூர்வதற்காக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி, 2021ஆம் ஆண்டு உடைக்கப்பட்டதற்கு பதிலளிக்கும் விதமாகவே மேயர் பெட்ரிக் பிறவுணினால் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவு நாளாக கனேடிய நாடாளுமன்றம் ஏகமனதாக நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

பிரம்டன் தமிழ் அமைப்பு மற்றும் பிரம்டன் மூத்தோர் தமிழ் அமைப்பு ஆகிய இரண்டு உள்ளூர் அமைப்புக்களிடம் இந்த நினைவுத்தூபியை நிர்மாணித்து, பராமரிப்பதற்கான பொறுப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த இரண்டு அமைப்புக்களும் நினைவுத்தூபியை அமைப்பதற்காக 150,000 டொலர்கள் நிதிசேகரிப்பினை ஆரம்பித்து, 2023ஆம் ஆண்டின் இறுதியில் 102,000 டொலர்களை திரட்டியிருந்தன.

கடந்த வருடத்தின் நவம்பர் மாதத்தில் முன்மொழியப்பட்ட பிரேரணைக்கு அமைய, கனேடியத் தமிழர்களுக்கான தேசிய பேரவையானது, இந்த நினைவுத் தூபிக்கான உரிமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பொறுப்பினைப் பெற்றது.

எனினும், இந்த நினைவுத்தூபி அமைக்கப்படும் இடத்திற்கான குத்தகைக் காலம் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

இந்த நினைவுத்தூபி முழுமையாக சமுதாய நிதிதிரட்டலின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இந்த செயல்திட்டத்திற்கான உத்தேச செலவு இதுவரை கணிக்கப்படவில்லை.

இந்த நினைவுத்தூபியின் நிர்மாணம் இரு படிநிலைகளாக இடம்பெறவுள்ளதுடன், முதலாவது படிநிலை இவ்வருடம் மே மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுபெறவுள்ளதுடன், இரண்டாவது படிநிலை அடுத்த வருடம் (2025) மே 18ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு பெறும்.

இந்த நினைவுத் தூபிக்கான வடிவம் தொடர்பில் பகிரங்க போட்டி அறிவிக்கப்பட்டதுடன், சுமார் 100,000இற்கும் அதிகமான வடிவங்கள் கிடைக்கப்பட்டு, 2022 செப்ரம்பரில், தண்ணீரில் மலர் ஒன்று மலர்வதனைப் போன்ற ஒரு வடிவம் பிரம்டன் நகரசபையினால் தெரிவு செய்யப்பட்டது.

இந்த வடிவத்திற்கு பொதுமக்கள் மத்தியில் எதிர்ப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, கனேடியத் தமிழர்களுக்கான தேசிய பேரவையானது வடிவத்தைத் திருத்தியமைக்க முடிவெடுத்தது.

புதிய வடிவம் தமிழர்களின் பாரம்பரியத்தையும், தாயகத்தையும் பிரதிபலிப்பதாக இருப்பதாக கனேடியத் தமிழர்களுக்கான தேசிய பேரவை தெரிவிக்கின்றது.

இந்த நினைவுத்தூபி நிர்மாணத்திற்கு கனடாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் எதிர்ப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 'மிக அபாயகரமான' நிலை மைகள் திங்கள் வரை தொடரும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

தென்மேற்கு மற்றும் வடமேற்கு பிரிட்டிஷ் கொலம்பியாவின் மலைப் பகுதிகளுக்கும், அல்பர்ட்டாவின் கன னாஸ்கிஸ் உட்பட மாநிலத்தின் கிழக்குப் பகுதிக்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

சமீபத்திய புயல்கள் இந்த மாத தொடக்கத்தில் கட்டமைந்த 'பலவீனமான அடுக்குகளில்' அதிக அளவு பனி படிந்துள்ளதாக கூறுகிறது. அவை மனி தனால் தூண்டப்பட்ட பனிச்சரிவுகளுக்கு ஆளாகின்றன.

இதற்கிடையில், கடுமையான பனிப் பொழிவு மற்றும்



குளிர்கால புயல் நிலை மைகளால் பிரிட்டிஷ் கொலம்பியாவில் இரண்டு நெடுஞ்சாலைகளின் உயர மான பகுதிகள் இந்த வாரம் மூடப்பட்டிருந்து, அதன்பின்னர் மீண்டும் திறக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெறுப்புக் குற்றத்தில் ஈடுபடலாம் என்ற சந்தேகத்தில் கட்டுப்பாடு விதிக்க முன் பல நடவடிக்கைகள் அவசியம்

## கனடாவின் மத்திய நீதி அமைச்சர் அரிப் விரானி தெரிவிப்பு



ஒன்ராரியோ, மார்ச்01

ஒரு நபர் ஒரு வெறுப்புக் குற்றத்தைச் செய்யக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக அவரது நடமாட்டத்தை நீதிபதிக் கட்டுப்படுத்துவதற்கு முன் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கனடாவின் மத்திய நீதி அமைச்சர் அரிப் விரானி தெரிவித்துள்ளார்.

இணையத் தீங்குகள் சட்டத்தை உருவாக்கும் போது, வெறுப்புக் குற்றங்களின் அதிகரிப்புக்கு சிறப்பாக பதிலளிக்குமாறு மத்திய அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனப்படுகொலையை ஆதரிப்பது அல்லது வெறுப்பைத் தூண்டுவது போன்ற வெறுப்புப். பிரச்சாரக் குற்றம் உட்பட ஒரு நபர் ஒரு வெறுப்புக் குற்றத்தைச் செய்வார் என்று அஞ்சும் ஒருவர், அந்த நபருக்கு நிபந்தனைகளை விதிக்க நீதிபதியைக் கேட்கும் வகையில் குற்றவியல் சட்டத்தை திருத்த இந்த சட்டமூலம் முயற்சிக்கின்றது.

அவர்கள் மின்னணு கண்காணிப்பு சாதனத்தை அணிய வேண்டும், தங்களுடைய வீட்டில் தங்க வேண்டும், குறிப்பிட்ட பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் அல்லது கட்டளைக் கோரும் நபரிடமிருந்து விலகி இருக்க வேண்டும் என்பன இதில் குறிப்பிடத்தக்கவையாகும்.

# அடுத்த மூன்று ஆண்டுகளில் 10.5 பில்லியன் டொலர்களை பொது நிறுவனங்களிடமிருந்து மத்திய அரசு மீளப் பெறும்!

ஒன்ராரியோ, மார்ச் 01

69 துறைகள், நிறுவனங்கள் மற்றும் வர்த்தக, பொது நோக்கங்களைக் கொண்ட நிறுவனங்களின் வரவு செலவுத் திட்டங்களில் இருந்து அடுத்த மூன்று ஆண்டுகளில் 10.5 பில்லியன் டொலர்களை மத்திய அரசு திரும்பப் பெறும் என்று திறைசேரித் தலைவர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.



பெப்ரவரி 29ஆம் திகதி கனேடிய நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அரசாங்கத்தின் முக்கிய செலவின மதிப்பீடுகளில் எந்தத் துறைகள் சேமிப்பைக் கண்டறிந்தன மற்றும் எவ்வளவு குறைக்கின்றன என்பதைத் தெரிவிக்கும் முக்கியமான பதிவுகள் உள்ளன.

ஆனால் அந்த நிதிகள் எங்கு திருப்பி விடப்படுகின்றன என்பதைக் காட்டும் விவரங்கள் எதுவும் இல்லை. நிதிகள் எங்கு நகர்கின்றன என்பதை அறிக்கைகள் ஏன் குறிப்பாகக் காட்டவில்லை என்பதற்கான விளக்கங்கள் கோரப்பட்ட போதே திறைசேரி தலைவர் ஆனந்த் இதனைத் தெரிவித்தார்.

ஒட்டுமொத்தமாக, மதிப்பீடுகள் அரசாங்கத்தில் 449 பில்லியன் டொலர்களாக திட்டமிடப்பட்ட செலவினங்களைக் காட்டுகின்றன, இது ஒரு வருடத்திற்கு முந்தைய முக்கிய மதிப்பீடுகளில் 432 பில்லியன் டொலர்களுடன் ஒப்பிடப்பட்டது.

அடுத்த ஆறு வாரங்களில் எதிர்பார்க்கப்படும் மத்திய அரசாங்கத்தின் புதிய வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடங்கும் புதிய செலவினங்கள் குறித்த எந்த விவரங்களும் இந்த ஆவணங்களில் இல்லை.

கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட புதிய பல் பராமரிப்பு திட்டம் மற்றும் சுகாதார அமைச்சர் மார்க் ஹொலண்ட் வியாழன் அன்று அறிவித்த புதிய மருந்தக திட்டம் உட்பட ஏற்கனவே அறிவிக்கப்பட்ட புதிய செலவினங்களையும் ஆனந்த் குறிப்பிட்டார்.




# சோகமான சம்பவங்களின் காணொலிகளை தனிப்பட்டவையாகப் பேணுமாறு பரிந்துரை

ஒன்ராரியோ, மார்ச் 1

சோகமான சம்பவங்களைப் பிடிக்கும் காணொலிகள் மற்றும் படங்களை இடுகையிடுவதை வழக்கமாக்கும் நபர்களை, அவற்றை தனிப்பட்டதாக வைத்திருப்பதைக் கருத்தில் கொள்ளுமாறு பீல் பிராந்திய பொலிஸார் வலியுறுத்துகின்றனர்.

மக்கள் பலத்த காயம் அடைந்த அல்லது கொல்லப்படும் சம்பவங்களின் காட்சிகளைப் பகிர்ந்து கொள்ள அவர்களுக்கு உரிமை இருந்தாலும், இந்த நடத்தை 'பொருத்தமற்றது, வெறுக்கத்தக்கது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகவும் அவமரியாதை' தரக்கூடியது என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

'துரதிரஷ்டவசமாக, காணொலிகளில் சித்திரிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சமூக ஊடகங்களில் இந்த சம்பவத்தைப் பார்த்து அறிந்து கொள்ளும் நிகழ்வுகள் மிக அதிகமாக உள்ளன,' என்று பொலிஸார் கூறினார்.



# நோயாளிகளின் மருத்துவ அறிக்கைகளை அனுமதியின்றிப் படித்த டாக்டர் சிக்கலில்!

ஒன்ராரியோ, மார்ச் 01

அனுமதியின்றி நோயாளிகள் பலரின் அறிக்கைகளைப் பார்த்த குற்றச்சாட்டில் வைத்தியர் ஒருவர் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஒன்ராரியோவின் தென்மேல் பிராந்திய வைத்தியசாலைகளில் பணியாற்றிய கதிரியிக்க நோய் கண்டறிதல் மருத்துவரான அஷ்லி ஜோன் மெர்காடோவுக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த மருத்துவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து, அவருக்கு நான்கு மாத தடையும், 6,000 டொலர்களை ஒன்ராரியோ மருத்துவர்கள் மற்றும் சத்திர சிகிச்சையாளர்கள் கல்லூரிக்கு செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நோயாளி, ஜூலை 2021இல், இந்த 'தனியுரிமை மீறல்' குறித்து உள்ளக விசாரணையை நடத்துவதற்குக் கோரினார். டாக்டர் மெர்காடோ இலத்திரனியல் மருத்துவப் பதிவு முறையைப் பயன்படுத்தி, 2015 மற்றும் 2021க்கு இடையில் தமக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்த 20 நோயாளிகளின் தகவல்களைப் பார்த்துள்ளார்.